வசதி இல்லை. அந்த மரம் அங்கே இருப்பதன் காரணத்தால் வயது முதிர்ந்தவர்களும், சைக்கிளிலே செல்பவர்களும் இரவு நேரத்திலே அந்தப் பாதையைக் கடக்கின்றபோது மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. விபத்திற்குள்ளாகக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே அவசரமாக அந்த மரத்தை அகற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரத்தை அகற்றுவதை விட அங்கே விளக்கு வசதி அமைத்து வெளிச்சத்தை ஏற்படுத்தினால் போகிறவர்களுக்கும், வருகிறவர்களுக்கும் உதவிகரமாக, நன்மையாக இருக்கும். எனவே, அதற்குண்டான ஏற்பாடு மாநகராட்சியால் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குடிசை மாற்று வாரியம் இராயபுரம் தொகுதியில் வீடுகள் கட்டுவது குறித்து.

திரு. ப. பொன்னுரங்கம்ம : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை, இராயபுரம் தொகுதி 6-வது வட்டம், காசிபுரம், 'ஏ' பிளாக் பகுதியிலுள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு (பட்டா உடையவர்கள்) எந்தவித நிவாரணமும் வழங்காமல் அந்நிலங்களைக் கையகப்படுத்த தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளபடியால் அப்பகுதி வாழ் நிலச் சொந்தக்காரர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி நிலம் கையகப்படுத்தப்படவில்லை.

சென்னை, இராயபுரம் தொகுதி 6-வது வட்டம் காசிபுரம் 'ஏ' பிளாக் என்ற இடத்தில் குடிசைப்பகுதி மாற்று வாரியம் 420 குடியிருப்புகள் கட்ட 1984 ஆம் ஆண்டில் திட்டமிட்டது. இந்த இடத்திற்கு '' பவர் குப்பம்-காசிபுரம் 'ஏ' பிளாக் '' என்று பெயர். இந்த நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமானது. இதில் 276 குடியிருப்புகள் 1986 ஆம் ஆண்டு மார்ச் முடிய கட்டி முடிக்கப்பட்டன. மீதம் உள்ள 144 குடியிருப்புகள் கட்டுவதற்கு தேவையான நிலத்தில் வசிப்பவர்கள் ஒரு சிலர் தங்களுக்கு வட்டாட்சியாளரால் மனை பட்டா வழங்கப்பட்டதாக தெரிவித்து உள்ளார்கள். ஆகையால், இது குறித்து வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு செய்யப்படுகிறது. எனவே தற்போது இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் அவசியம் எழவில்லை.

1986 ஏப்ரல் 28]

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடிசைமாற்று வாரியத்தால் வீடு கட்டுகிற அதே நேரத்தில் அந்த நிலத்தை ஒட்டியே சில பட்டாதாரர்கள், பட்டா நிலத்துக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் தங்களுக்கு குடிசை மாற்று வாரியம் போல் அல்லாமல் தனியாகவே வீடுகளைக் கட்ட, கடனாக எல்.ஐ.ஜி. போன்ற ஸ்கீம் மூலமாக அரசின் மூலம் அமைக்க வேண்டும் என்று கூட அமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பம் எல்லாம் போட்டிருப்பதாக நான் அறிகிறேன். கணக்கெடுத்தால் அவர்கள் 20 அல்லது 30 பேர்தான் இருக்கக்கூடும். எனவே உண்மையிலேயே பட்டா உடையவர்களைக் கணக்கெடுத்து அவர்களுக்கு அவர்களுடைய விருப்பம் போல் அதே இடத்திலே எல்.ஐ.ஜி. என்ற அமைப்பிலே வீடுகளைக் கட்டித் தர அரசு முன்வருமா?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது மீதம் உள்ள 144 வீடுகளை அங்கே கட்ட வேண்டும். அங்கே 4 பேர்கள்தான் அந்தப் பட்டாவைக் கையிலே வைத்துக்கொண்டிருப்பதாகக் குறிப்பு வைத்திருக்கிறார்கள். மீதி 8 பேர் தீ விபத்தில் எரிந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இருக்கிற கருத்தின் அடிப்படையில் பார்க்கிறபோது 12 பேர் பட்டா நிலம் வைத்திருப்பதாகவும், அதிலே அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்றும் சொல்லுகிற கருத்து இருக்கிறது. அந்த 144 வீடுகளைக் கட்டுகின்ற ஸ்கீமிலே மாற்றம் செய்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற அந்த எண்ணிக்கையைக் கணக்கெடுத்து அங்கே ஏதாவது மாற்று ஏற்பாட்டைச் செய்வதற்கு, அதை அரசாங்கம் உருவாக்குவதற்கு முடிந்தால் ஏற்பாடு செய்யும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய வீடுகளைக் கட்டுவதற்கே அவர்கள் தடையாக இருக்கிறார்கள். அந்தப் பட்டாதாரர்கள் எங்களுக்கு அதிலே தனியாக வீடு வேண்டுமென்று கேட்கிறார்கள். அதனால் அந்த ஸ்கீமே ஹெல்ட் அப் ஆகி இருக்கிறது. அதிகாரிகளும், கான்ட்ராக்டர்களும் திணறுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் இன்னொரு வேலையும் செய்ய இருக்கிறார்கள். இப்போது என்னுடைய கையிலே ஒரு ஸ்லிப் இருக்கிறது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனை கழகத்தை அவர்கள் அணுகி இருக்கிறார்கள். அவர்கள் ஸ்டே வாங்க இருக்கிறார்கள். வேண்டாம், அரசோடு ஒத்துப் போங்கள் என்று நானே சொல்லியிருக்கிறேன். ஆகவே இதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்ற தகவலை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிப்பதன் மூலம் குடிசைமாற்று

வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட ஏதுவாக இருக்கும். தடை ஏற்படாது. தடை ஏற்படுத்தக்கூடாது என்று சம்பந்தப் பட்டவர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கைகள் உரிய முறை யில் கவனிக்கப்படும் என்று ஆணை மூலமாக தகவல் தெரிவிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெருந்தன்மையாக அந்த இடத்தில் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியதற்கு நன்றி. அங்கே அவர்கள் மாற்றுக் கருத்துத் தெரிவித்தாலோ அல்லது நீதிமன்றம் சென்று தடை ஆணை வாங்கினாலோ திட்டம் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற் படும். அதைத் தடுக்கக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவருக்கு நான் சட்டமன்றத்தில் கூறிய பதிலையே அவர்களுக்கு வாக்குறுதி யாக அவர் கூறலாம். அந்த அடிப்படையில் உரிய நடவடிக்கை யை இந்த அரசு எடுக்கும்.

4. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பாக அக்குழுவின் கீழ்க்கண்ட 29-வது மற்றும் 30-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன் :

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் வனம் மற்றும் மீன்வளத்துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) போக்குவரத்துத் துறை பற்றிய பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பதாவது அறிக்கை.

5. வரவு-செலவுத் திட்டம், 1986–87, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,87,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."